ஊவா மாகாண சபையின் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேலையற்ற பட்டதாரிகள்/ உயர் தேசிய கணக்கியல் வர்த்தக டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்த்தல் – 2017

ஊவா மாகாண சபையின் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் பின்வரும் பாடங்களுக்காக நிலவும் ஆசியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய கணக்கியல் / வர்த்தக டிப்ளோமாதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2017-02-27ஆம் திகதியாகும்.

அட்டவணை இல. 01 - வெற்றிடங்களின் பாட அட்டவணை

தொ. இல.	பாடங்கள்	பாட சங்கேத இல.
01-11 வருடங்கள் வரையில் வெற்றிடங்கள் நிலவும் பாடங்கள்		
1	ஆரம்பக் கல்வி	21
2	இஸ்லாம்	22
3	இந்து சமயம்	23
4	விவசாயம் மற்றும் உணவு தொழில்நுட்பம்	24
5	கணிதம்	25
6	சித்திரம்	26
7	விஞ்ஞானம்	27
8	தகவல் தொழில்நுட்பம்	28
9	வரலாறு	29
	க.பொ.த. (உ/த) பாடங்கள்	
1	இரசாயனவியல்	30
2	பௌதீகவியல்	31
3	உயிரியல்	32
4	இணைந்த கணிதம்	33
5	அரசியல் விஞ்ஞானம்	34
6	புவியியல்	35
7	கணக்கியல்	36
8	வர்த்தக விஞ்ஞானம்	37

01. ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள்:

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையில் அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நன்னடத்தை மற்றும் சிறந்த தேகாரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான மனநிலையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) ஊவா மாகாணத்தின் நிரந்தர வதிவாளர்கள் மற்றும் ஊவா மாகாணத்தை அண்மித்த வெளிமாகாணங்களான மத்திய, சபரகமுவ, கிழக்கு மற்றும் தெற்கு மாகாண வதிவாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பாடத்திற்கும் தகைமையுள்ளவர்கள் ஊவா மாகாணத்தில் இல்லாதவிடத்து மாத்திரமே வெளிமாகாணங்களின் விண்ணப்பதாரிகள் பரிசீலிக்கப்படுவர். நேர்முக பரீட்சையின்போது வாக்குரிமைப் பட்டியல் மூலம் அல்லது கிராம சேவையாளரின் சான்றிதழ் மூலம் நிரந்தர வதிவிடத்தை எண்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

ஊவா மாகாண எல்லைக்குள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தில் 03 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நிரந்தர வதிவிடதைக் கொண்டவரை சட்டபூர்வமாக திருமணம் செய்து ஊவா மகாணத்திற்குள் வந்துள்ள விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தில் வாக்குரிமைப் பட்டியலில் தமது பதிவை உறுதி செய்துள்ளவரும் விண்ணப்பிக்கலாம். அவ்வாறானவர்கள் எழுத்து மூல சாட்சி மூலம் இந்த நிலைமையை உறுதி செய்தல் கட்டாயமாகும்.

(ஈ) 2017-02-27 ஆம் திகதியில் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

02. கல்வித் தகைமைகள்:

2.1 2.1.1 03 பாடங்களில் திறமைச் சித்தியுடன் மொழி / இலக்கியம் மற்றும் எண் கணிதம் / கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் க.பொ.த. (சா/தர)ப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.1.2 க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் சாதாரண பொதுப் பரீட்சைத் தவிர குறைந்த பட்சம் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் பழைய பாடத் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக பிரவேசத்துடன் (குறைந்தபட்சம் 03 பாடங்களில்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தேசிய க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குச் சமமான ஏற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களில் சித்தியடைந்த வர்களும் விண்ணப்பிக்கலாம்.

2.2 மேற்படி 2.1 இன் தகைமைகளுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் உரித்தான பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தொ. இல.	பாடம்	கல்வித் தகைமைகள்
01-11 வருட பாடங்களுக்குரித்தான தகைமைகள் :		
1	ஆரம்பக் கல்வி	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சாதாரண அல்லது விசேடப் பட்டத்தைப் பெற்றிருத்தல்
2	இஸ்லாம், இந்து சமய வரலாறு	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுடைய பாடத்துறை தொடர்பான விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்
3	சித்திரம்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் பெற்றுக்கொண்ட கட்புலக் கலை பட்டம் **அல்லது** விண்ணப்பிக்கும் பாடத்தினை பிரதான பாடமாகக் கற்று பட்டத்தைப் பெற்றிருத்தல் **மற்றும்** க.பொ.த. (உ/தர)ப் பரீட்சையில் இயைபுடைய பாடங்களைக் கற்று சித்தியடைந்திருத்தல் ** குறிப்பைப் பார்க்கவும்
4	விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் விவசாய விஞ்ஞானமாணி அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்
5	கணிதம்/ விஞ்ஞானம்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பௌதிகவியல் / உயிரியல் விசேட அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்
6	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ கணனி விஞ்ஞானம் தொடர்பான விசேட அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்

2.2.2 க.பொ.த. (உ/தர)ப் பாடங்களுக்குரித்தான தகைமைகள்:

தொ. இல.	பாடம்	கல்வித் தகைமைகள்
1	இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், இணைந்த கணிதம், அரசியல் விஞ்ஞானம், புவியியல் விஞ்ஞானம்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுடைய பாடத்திற்குரிய விசேட அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்
2	கணக்கியல் வர்த்தகக் கல்வி	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுடைய பாடத்துறைக்குரித்தான விசேட அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட உயர் தேசிய கணக்கியல்/ வர்த்தக டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்

** **குறிப்பு:** கட்புலக் கலை விசேட பட்டதாரிகள் போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்குமுரிய ஆக்கபூர்வமான மட்டம் (40%) பெற்றிருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் அப்பட்டதாரிகளுக்கான வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின் மேலும் வெற்றிடங்கள் மிகுதியாக நிலவுமானால் மட்டும் போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்குமுரிய ஆக்கபூர்வமான மட்டத்தை (40%) பெற்றுள்ள பட்டதாரிகள் திறமை வரிசைக்கிரமத்திற்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

2.3: ஒவ்வொரு பாடத்திற்கும் உரித்தான மேலேயுள்ள 2.1 மற்றும் 2.2 வரையுள்ள தகைமையானது 2017.02.27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.

03. சேவை நிபந்தனைகள்:

(அ) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது.

(ஆ) முதலில் நியமனம் பெறும் பாடசாலையில் 05 வருட காலம் கட்டாயம் சேவை செய்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இடமாற்றம் அல்லது இணைந்த சேவை தொடர்பில் செய்யப்படும் வேண்டுகோள்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(இ) 05 வருட கால சேவை காலத்தின் பின் ஊவா மாகாணத்திலுள்ள வேறொரு பாடசாலைக்கு சேவை அவசியத்தின் பேரில் ஊவா மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு அமைய இடமாற்றமொன்று ஊவா மாகாண சபை கல்வி அமைச்சின் மூலம் வழங்குவது பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

(ஈ) வெளிமாகாண விண்ணப்பதாரிகள் ஊவா மாகாணத்தில் 5 வருட காலம் கட்டாயமாக பணியாற்றல் வேண்டும்.

(உ) அரச நியமனங்களை நிர்வாகம் செய்யும் பொது நிபந்தனைகளுக்கும், 2014-10-23ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் 1885/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்க விதிக்கோவையில் விதிக்கப்பட்டுள்ளதும் அந்தப் பிரமாணங்களின் படியும் அல்லது இதன் பின் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இந்நியமனம் உட்படும்.

(ஊ) பட்டதாரிகள் ஊவா மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திலும், டிப்ளோமாதாரிகள் ஊவா மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (இ) தரத்திலும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(எ) 2016-02-25ஆம் திகதிய 03/2016ஆம் இலக்க அ. நி. சுற்றுநிருபத்தின் GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா 27,740.00 - 300x6 - 380x7 - 445x2 - 33,090.00 மாதாந்த சம்பள அளவிற்கு அமைய பட்டதாரிகள் 14வது சம்பள நிலையான 32,200.00 மாதாந்த சம்பள அளவிலும், இந்த சுற்றுநிருபத்தின் IIஆம் இலக்க அட்டவணைக்கமைய ஒவ்வொரு வருடத்திற்கும் தரப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.

04. சேர்த்துக்கொள்ளப்படும் முறை:

4.1 2014-10-23ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசின் 1885/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்க விதிக்கோவையின் 7.2.3.2 மற்றும் 7.2.3.4 விதிமுறைகளுக்கமைய பாடசாலை அடிப்படை முறையின் கீழ் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

4.2 ஊவா மாகாண விண்ணப்பதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படு மென்பதுடன், அவர்களுக்கு நியமனம் வழங்கிய பின்னர் வெற்றிடங்கள் இருப்பின் மாத்திரமே, வெளிமாகாண விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

4.3 உரிய தகைமைகளுடனான முறையான விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை அந்தப் பாடத்திற்காக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாகவிருந்தால் போட்டிப் பரீட்சையின்றி ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினரால் பொதுவான நேர்முகப் பரீட்சை மற்றும் கற்பிக்கும் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கான செயல்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் உட்படுத்தப்பட்டு தகைமையானவர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.4 உரிய தகைமைகளுடனான முறையான விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுதலாகவிருந்தால் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை மற்றும் கற்பிக்கும் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கான செயல்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் உட்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் திறமை வரிசைக்கிரமத்திற்கமைய தகைமையானவர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.5 **பொது நேர்முகப் பரீட்சை:**
இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்க விதிக்கோவை மற்றும் அதற்கமைவாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் அல்லது இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை பரிசீலனை செய்தல் மற்றும் உடல் மற்றும் உள தகைமைகள் பரிசீலனை செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

4.6 **செயல்முறைப் பரீட்சை**
ஆசிரியர் தொழிலின் முக்கியத்துவமான கற்பித்தல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரரிடமுள்ள திறமைகள் அளவிட்டுப் பார்க்கப்படும். இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்க விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இதற்கான புள்ளிகள் வழங்கப்படும். நேரம் - 5 நிமிடத்திற்குக் குறையாத நேரம் வழங்கப்படும். - உச்ச புள்ளிகள் 25

4.7 அதேபோல் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயம் அல்லது அச்சந்தர்ப்பம் ஆசிரியர் சேவை சட்டவாக்க விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

05. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

5.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய A4 அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் மிகவும் தெளிவாக உங்கள் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அதில் இல. 01 முதல் 07 வரையான தகவல்களை முதலாம் பக்கத்திலும் மிகுதியாகவுள்ள தகவல்களை இரண்டாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பங்கள் தயார் செய்து கொள்ளப்படல் வேண்டும்.

5.2 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2017-02-27ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பிலிபொத்தகம வீதி, பிங்அராவ, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஊவா மாகாண சபை தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய கணக்கியல் / வர்த்தகவியல் டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்த்தல் - 2017'' எனவும் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

5.3 விண்ணப்பதாரரொருவருக்கு ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பாடத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இது தொடர்பாக செய்யப்படும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அட்டவணை 01ற்கு அமைய விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட சங்கேத குறியீடு என்பவற்றை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.4 ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்தில் தமது விருப்பை வரிசைக் கிரமத்திற்கு அமைய 02ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கிடையில் விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய வெற்றிடம் நிலவும் 03 பாடசாலைகளை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலை மற்றும் அதன் வரிசைக் கிரமம் பின்னர் மாற்றப்படமாட்டாது. சேவையின் தேவைப்பாட்டிற்கமைய விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வேறு பாடசாலைக்கு நியமித்தல் மற்றும் பாடசாலையை பெயரிடல் என்பன ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

5.5 உரிய மாதிரிக்கு ஒவ்வாத மற்றும் தாமதமாகக் கிடைக்கும், பரீட்சை மற்றும் நிர்வாகக் கட்டணங்கள் செலுத்தப்படாத, பிந்திக் கிடைக்கும், குறைபாடுகளுடன் பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய தகைமைகள் இல்லாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவானவையாக சமர்ப்பித்தல் விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைந்து போதல் மற்றும் தாமதித்தல் தொடர்பாகச் செய்யப்படும் எந்த முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் உபயோகமானதாகும்.

5.6 **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரத் தகைமை பெற்ற அதிகாரி/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரித்த பதவியை வகிக்கின்ற அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தப் பதவி வகிக்கும் 240,360/- ரூபா அல்லது அதற்கு அதிகமான வருடாந்த சம்பளத் தொகையொன்றை சம்பளமாகப் பெறுகின்ற அதிகாரி ஒருவர் மூலமோ உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

06. பரீட்சை மற்றும் நிர்வாகச் செலவுகள்:

பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவு 600.00 ரூபாவாகும். இக்கட்டணத்தை ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஏதாவது பிரதேச செயலகத்தில் மட்டும் ''ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13க்கு'' ரொக்கப் பணமாக மட்டும் வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராதவாறு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் வெளிமாகாண விண்ணப்பதாரிகள் மாத்திரமே உரித்தான பரீட்சைக் கட்டணத்தை நாட்டின் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் ஊவா மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 269-1-001-4-8440477 என்ற கணக்கிலக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பலாம்.

இங்கு பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் கட்டாயமாகும். எதிர்கால தேவைகளின் நிமித்தம் அதன் புகைப்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் மிக முக்கியமாகும். ஏனைய நிறுவனங்களுக்குப் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டோ, காசுக்கட்டளையோ, முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதோடு, அவ்வாறான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். செலுத்திய பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

07. பரீட்சை விதிமுறைகள் மற்றும் போட்டிப் பரீட்சைக்கான பாடவிதானங்கள்:

7.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் தீர்மானத்தின் பிரகாரம் உரிய வகையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்கள் பரீட்சித்துப் பார்க்கப்படாமலேயே போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பிரவேசப் பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் ஐந்து தினங்களுக்கு முன் பிரவேசப் பத்திரம் கிடைக்காத அபேட்சகர்கள் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அது தொடர்பில் ஆணைக்குழுவில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபாலிடும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதிகளை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.

7.2 போட்டிப் பரீட்சையானது பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நடாத்தப்படும். போதுமான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து பதுளை மாவட்டத்தில் மட்டும் பரீட்சை நடாத்தப்படும்.

7.3 பரீட்சார்த்தி தமக்கு உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்பட நேரிடும்.

7.4 பரீட்சை நாளில் அபேட்சகர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது வலுவிலுள்ள வெளிநாட்டுக் கடவுச் சீட்டை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்களைத் தவிர வேறெந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.5 போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பிரவேசப் பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக அமையாது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாமை தெரியவரின் அந்த விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவராகக் கருதப்படுவார்.

7.6 இப்போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் முழு பரீட்சைக்கும் ஒரு மொழிமூலத்தில் மாத்திரமே தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7.7 எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையானது பல்தேர்வு அல்லது சுருக்கமான பதிலை கொண்ட 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும். சகல அபேட்சகர்களும் இரு வினாத்தாள்களுக்காகவும் தோற்றுதல் வேண்டும்.

பொது உளச் சார்பு நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்).

- அபேட்சகரிடமுள்ள ஆசிரிய தொழிலுக்கான திறமை மற்றும் தர்க்கிக்கும் அறிவு தொடர்பான பரிசீலனை செய்வதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்தேர்வு அல்லது சுருக்கமான பதில் மாதிரியிலான 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பொது அறிவு நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்).

- ஆசிரிய தொழிற்துறைக்கும் அத்துறை தொடர்பாக உள்ள பொது அறிவு அல்லது/மற்றும் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படும் கல்வி முன்னேற்றம் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பான பொது அறிவை பரிசீலனை செய்வதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்தேர்வு அல்லது சுருக்கமான பதில் மாதிரியிலான 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப் பத்திரம் தொடர்பிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.8 செயன்முறைப் பரீட்சை: நேரம் - 5 நிமிடத்திற்குக் குறையாத நேரம் வழங்கப்படும். அதிகபட்சப் புள்ளிகள் 25

விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பணமொன்றை முன்வைத்தல் வேண்டும். இதன்பொருட்டு பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும். இந்தப் பரீட்சையானது ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

தொ. இல.	செயல்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் தேர்வுமுறை	தேர்வுமுறையின் நோக்கம்	அதிக பட்சப் புள்ளிகள்	தேர்ச்சியடைவ தற்குத் தேவையான குறைந்தபட்ச புள்ளி அளவு
1	நோக்கம் மற்றும் நுழைவு	வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாடத்திற்கு நுழையும் ஆற்றலை மதிப்பிடல்	05	02
2	ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு	ஆசிரியரொருவராக சிறந்த ஆளுமையுடையவராய் இருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சிறந்த முறையில் குரலை கட்டுப்படுத்தும் ஆற்றலை மதிப்பிடல்	05	02
3	தொடர் பாடலில் தெளிவு பற்றியது	கற்றல் / கற்பித்தல் செயற்பாட்டின் போது உரிய விடயங்களை பயனுள்ள வகையில் தொடர்பாடும் ஆற்றலை மதிப்பிடல்	05	02
4	நேர முகாமைத்துவம்	வழங்கப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை அடைவதற்கான திறமையை மதிப்பிடல்	05	02
5	சமர்ப்பித்தலில் நுட்ப முறையைப் பாவித்தல்	நோக்கத்தை அடைவதற்காக சமர்ப்பித்தலில் நுட்ப முறையை சிறந்த முறையில் பாவிக்கும் ஆற்றலை மதிப்பிடல்	05	02
		மொத்தப் புள்ளிகளின் அளவு	25	10

* செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு தேர்வுமுறையின் பொருட்டும் குறைந்தபட்சம் 2 புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.

08 நேர்முகப் பரீட்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரர்கள் தொடர்பாக எவ்விதத்திலும் மீண்டும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

09. அவ்வாறே நேர்முகப் பரீட்சை தினத்தில் அனைத்து சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்விதமான சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. பிழையான தகவல்களை வழங்குதல்:

இப்பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு எந்தவொரு அபேட்சகருக்காவது தகைமை இல்லை எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது பரீட்சையின் பின் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு நேரிடும். சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் அபேட்சகர் சமர்ப்பித்துள்ள ஏதாவது தகவல் பொய்யானவை அல்லது வேண்டுமென்றே பிழையான தகவல்களை வழங்கியுள்ளார் அல்லது உண்மைத் தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்பது தெரியவரின் அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கு இடமுண்டு.

11. இப்பதவிகளுக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல் / செய்யாதிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையின் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் அல்லது இது தொடர்பான ஏதாவது விடயம் தொடர்பான இறுதி முடிவு ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும். அவ்வாறே இந்த அறிவித்தலில் விதிமுறை செய்யப்படாத ஏதாவது ஒரு விடயம் இருப்பின் அது பற்றி விளக்கமளித்தல்/ முடிவெடுத்தல் ஊவா மாகாண ஆளுநரின் ஆலோசனையின் பேரில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

ஆர்.எம்.டி.பி. பாதியல்தெனிய,
செயலாளர்
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

2017.02.02ம் திகதி,
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு
பதுளை.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக மட்டும்

ஊவா மாகாண சபையின் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய கணக்கியல்/ வர்த்தக டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்த்தல் -2017

Recruitment of Graduates & Higher National Accounts/Commerce Diploma Holders to the Existing Teacher Vacancies in Tamil Medium Schools in Uva Provincial Council - 2017

01 நிரந்த வதிவு மாவட்டம்:

02. 2.1 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் நகரம்:

நகரம்	நகர எண்

(பதுளை-1, மொனராகலை-2)

2.2 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலம்: தமிழ்-4, ஆங்கிலம்-3

2.3 விண்ணப்பிக்கும் பாடம்:

பாடம்	பாட சங்கேத இல.

(01ஆம் இலக்க அட்டவணைக்கு அமைய விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட சங்கேத இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

2.4 விண்ணபிக்கும் பாடசாலை:

தொ.இல.	வலயம்	வெற்றிடம் நிலவும் பாடசாலை

(அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பிக்கும் பாடசாலைகள் 03 மற்றும் அதற்குரிய வரிசைக்கிரம எண்ணை விருப்பத் தெரிவின் பிரகாரம் வரிசைக் கிரமமாகக் குறிப்பிடுதல் வேண்டும். இந்த வரிசைக் கிரமம் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது)

03. 3.1 முழுப் பெயர்:.....
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3.2 முதல் எழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr./Mrs./Miss:.....
.....
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம்: **HERATH A.M.N.**

3.3 முழுப் பெயர்.....:
(சிங்களத்தில்/ தமிழில்)

04. 4.1 நிரந்தர முகவரி .....:
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

4.2 நிரந்தர முகவரி .....:
(சிங்களத்தில்/ தமிழில்)

4.3 தொலைபேசி இலக்கம்.....:

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

06. 6.1 பிறந்த திகதி: வருடம் மாதம் திகதி

6.2 2017.02.27ம் திகதியன்று வயது: வருடம் மாதம் நாள்

6.3 பால் : ஆண்/பெண்: பெண்-1/ஆண்-0

6.4 விவாக நிலை: விவாகமானவர்-1/ விவாகமாகாதவர்-2

07. கல்வித் தகைமைகள்:

7.1 க.பொ.த (சா/தர)ப் பரீட்சை

	வருடம்	பரீட்சை இல:.....
	பாடம்	சித்தி
1		
2		
3		
4		
5		
6		
7		
8		

7.2 க.பொ.த (உ/தர)ப் பரீட்சை

	வருடம்	பரீட்சை இல:.....
	பாடம்	சித்தி
1		
2		
3		
4		

7.3 பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்/ டிப்ளோமா பற்றிய விபரங்கள் :

பட்டம்/ டிப்ளோமா	வழங்கிய நிறுவனம்	செல்லுபடியாகும் திகதி	கற்றுள்ள பாடங்கள்	பட்டம்/டிப்ளோமா பெற்றுள்ள மொழி மூலம்

08. செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா : .....
பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம்: .....
பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்: .....

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இந்தக் கூட்டில் கழறாதவாறு ஒட்டவும்

09. **விண்ணப்பதாரரின் சான்றிதழ் :**

..... ஆகிய என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரியதாக உண்மையானதும் சரியானதும் என சான்றுப்படுத்துகிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதென கண்டுபிடிக்கப்பட்டால் என்னால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள மேற்படி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு எனது உரிமை கவனத்திற்கொள்ளப்படாமல் இருப்பதற்கும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முடியும் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகம் / ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கீழ்ப்படிகிறேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

திகதி ....

விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ..... முகவரியில் வதியும் திரு/திருமதி/செல்வி ..... என்பவரை, நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ..... ஆம் திகதி அவரது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி ....

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(உத்தியோக முத்திரை இடவும்)

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர்: .....
பதவி: .....
முகவரி: .....

அட்டவணை இல. 02

வெற்றிடம் நிலவும் பாடசாலைகளின் அட்டவணை (தமிழ் மொழிமூம்)

இல.	வலயம்	பாடசாலைப் பெயர்	01 - 11 வருடம்									க.பொ.த. (உ/த)								
			ஆரம்பக் கல்வி	இல்லாம்	இந்து சமயம்	விவசாயம் மற்றும் உணவு தொழில்நுட்பம்	கணிதம்	சித்திரம்	விஞ்ஞானம்	தகவல் மற்றும் தொழில்நுட்பம்	வரலாறு	இரசாயவியல்	பௌதீகவியல்	உயிரியல்	இணைந்த கணிதம்	அரசியல் விஞ்ஞானம்	புவியியல்	கணக்கியல்	வர்த்தகக் கல்வி	மொத்தம்
1	பதுளை	ப/அல்-அதான் ம.வி										1		1	1					3
2		ப/ தமிழ் பாலிகா வி.										1		1	1					3
3		ப/ஊவா வித்யா வி.										1	1							2
4		ப/கலைவாணி தமிழ் வி.								1										1
5		ப/கிராம்ஸ்லாண்ட் த.வி.	1																	1
6		ப/மாபாகள த.வி.	1																	1
7		ப/செல்சி த.வி.	1																	1
8		ப/அல்-இர்சாத் மு.வி.														1				1
9		ப/நேப்பியர் த.வி.	1																	1
10		ப/ செரண்டிப் த.வி.				1														1
11	பதுளை	ப/கின்றோஸ் த.வி.	1																	1
12		ப/ றொசட் த.வி.					1				1									2
13		ப/செயின்ட் ஜேம்ஸ் த.வி.	1			1														2
14		ப/ஊவா ஹைலண்ட் ஆ.த.வி.	1																	1
15		ப/ஊவா ஹைலண்ட் த.வி.																1		1
16	பண்டாரவளை	ப/கோணமொட்டாவ த.வி.					1													1
17		ப/பண்டாரவளை த.ம.வி.										1		1						2
18		ப/ரஷிக் பரீட் மு.ம.வி.						1												1
19		ப/கிரேக் இல. 1 த.வி.																1		1
20		ப/நாயபெத்த இல. 1 த.வி.	1				1													2
21		ப/அயிஸ்லபி த.வி.								1										1
22		ப/ஸ்ரீ கணேஷா த.ம.வி.	1						1											2
23		ப/ஹல்துமுல்ல த.ம.வி.															1			1
24		ப/மகல்தெனிய த.வி.	1																	1
25		ப/பூணாகல த.ம.வி.	1																	1
26		ப/அம்பிட்டிகந்த த.வி.	1																	1
27		ப/ஆர்னோல்ட் த.வி.	1																	1
28		ப/மீரியபத்த த.வி.	1																	1
29		ப/மஹகந்த த.வி.	1																	1
30		ப/விபுலானந்த த.ம.வி.				1														1
31		ப/மேற்கு அப்புத்தளை த.வி.	1																	1
32		ப/உடவேரிய த.வி.	1																	1
33		ப/நாகட்டிய த.வி.	1																	1
34		ப/அல்-பத்ரியா மு.வி.		1												1				2
35		ப/பிடடரத்மலை இல. 2 த.வி.	1																	1
36		ப/தம்பேதென்ன இல. 1 த.வி.							1											1
37		ப/தம்பேதென்ன இல. 3 த.வி.	1																	1
38		ப/ஹப்புத்தளை இல. 3 த.வி.	1																	1
39		ப/பிட்டரத்மலை இல. 1 த.வி.	1																	1
40		ப/முத்துவாண த.வி.	1																	1
41		ப/கெல்பர்ன் த.வி.	1																	1
42		ப/அல்-யாசீன் மு.வி.					1													1
43		ப/பகபிட்டகந்த த.ம.வி.			1											1				2
44		ப/கவரக்கலை த.வி.	1				1													2
45		ப/கினலன் த.வி.					1													1
46	வெலிமடை	ப/அல்-முர்ஷித் மு.வி.	1																	1
47		ப/பாதினாவள மு.வி.	1																	1
48		ப/வெலிமடை த.ம.வி.										1	1	1						3
49		ப/போகஹகும்புர மு.வி.									1									1
50		ப/டயரபா த.வி.	1						1											2
51		ப/சரஸ்வதி த.வி.	1						1											2
52		ப/இதல்கஸ்ஹின்ன த.வி.									1									1
53		ப/போடெஸ் த.வி.	1						1											2
54		ப/ஒஹிய த.வி.	1				1													2
55		ப/கணபதி த.வி.				1	1													2
56		ப/ஹபரகல த.வி.	1						1											2
57		ப/மீரஹவத்த மு.வி.	1			1														2
58		ப/கதுராதெக மு.வி.							1											1
59		ப/அலகொல்ல த.வி.					1													1
60		ப/கர்க்லிஸ் த.வி.				1														1
61		ப/கம்பஹ த.வி.					1		1											2
62		ப/வோல்ட்மார் த.வி.	1						1											2
63		ப/ரத்தம்ப மு.வி.									1									1
64		ப/ஹியுகோலண்ட் த.வி.									1								1	2
65	பசறை	ப/ஸ்ரீ இராமகிருஷ்ணா த.ம.வி.										1	1	1						3
66		ப/பசறை மு.வி.				1														1
67		ப/மடுல்சீமை த.ம.வி.				1			1											2
68		ப/பட்டவத்த த.வி.				1	1													2
69		ப/மஹதோவ கீழ் த.வி.	1																	1
70		ப/மஹதோவ மேல் த.வி.	1																	1
71		ப/திருமகள் த.வி.					1													1
72		ப/மிதும்பிட்டிய இல. 1 த.வி.	1																	1
73		ப/டமேரியா இல. 2 த.வி.	1																	1
74		ப/ஆகரதன்ன த.வி.					1													1
75		ப/கணவரல்ல இல. 1 த.வி.	1																	1
76		ப/பசறை இல. 4 த.வி.	1																	1
77		ப/அல்-அமீன் மு.வி.				1	1													2
78	மஹியங்கன	ப/பகரகம்மன மு.வி.	1			1	1													3
79	வெள்ளவாய	மொ/மஹவெலமுல்ல மு.வி.	1			1	1													3
80	மொனராகல	மொ/விபுலானந்த த.ம.வி.										1	1	1						3
81		மொ/அலியாவத்த த.க.வி.	1				1													2
82		மொ/ஸ்ரீ கௌரி த.க.வி.	1				1				1									3
83		மொ/சரஸ்வதி த.க.வி.	1								1									2
84		மொ/ஸ்ரீ ஷண்முகா த.க.வி.	1				1													2
85		மொ/விபுலானந்த த.ஆ.வி.	1																	1
86		மொ/அலுபொத்த மு.ஆ.வி.	1																	1
87		மொ/வைக்கும்புர த.க.வி.	1								1									2
88		மொ/கந்தஹேன இல. 2 த.க.வி.	1				1													2
89		மொ/கந்தஹேன இல. 1 த.க.வி.	1																	1
90		மொ/தன்னேகும்புர த.க.வி.	1																	1
91		மொ /கமேவெல த.க.வி.	1						1											2
92		மொ/கணுல்வெல மு.ம.வி.	1																	1
93		மொ/பிபிலவத்த த.க.வி.	1																	1
94	பிபில	மொ/தெனிகல த.க.வி..	2																	2
95		மொ/பகினிகஹவெல மு. இரு மொழி பாடசாலை										1	1							2
96		மொ/கொடிகமுவ ம.வி.	1																	1
97	வியலுவ	ப/கீனகல த.வி.	1																	1
98		ப/ரொபேரி த.வி.	1																	1
99		ப/எலமான த.வி.	1																	1
100		ப/நாரங்கல த.வி.	1																	1
101		ப/ லெஜர்வத்த இல. 2 த.வி.	1																	1
102		ப/ நூராணியா மு.வி.	1																	1
		மொத்தம்	64	1	1	12	20	1	11	2	8	9	6	6	2	3	1	1	2	150